Industrial weavers' Co-operative Society, Andipatti.

Q. No. 19—THIRU K. KANDASWAMY: Will the Hon. the Minister for Khadi and Handloom be pleased to state:

(a) whether there is any proposal to establish an Industrial Weavers' Co-operative Society in Andipatti, Madurai district; and

(b) if so, the action taken thereon?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: ஆண்டிப் பட்டிக்கு அருகில் உள்ள சக்கம்பட்டியில் ஓர் தொழிலியல் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் பதிவு செய்யப்பட்டு பூர்வாங்க வேலைகள் துவக்கப்பட்டுள்ளன.

திரு. கே. கந்தசாமி: பேரவைத் தலைவரவர்களே, அந்த மக்களுடைய எண்ணத்தை நிறைவேற்றுகிற அளவுக்கு மாண்பு மிகு அமைச்சரவர்கள் உரிய உத்தரவை விரைவாகப் பிறப்பித்த மைக்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். இன்னும் வேலைகள் தாமதமாக நடைபெற்று வருகின்றன. அவற்றை விரைவுபடுத்து வதற்கான உத்தரவுகளைப் பிறப்பித்து மக்களை ஊக்கப்படுத்து வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி செகதீசன்: தலைவர் அவர் களே, வேலைகள் துரிதமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஜனவரியில் அந்தச் சங்கம் முழு உற்பத்தியைத் துவக்க ஏற்பாடு கள் செய்யப்பட்டிருக்கின்றன.

Sale of accumlated Handloom goods.

*Q. No. 20—Thiru N. KITTAPPA: Will the Hon. the Minister for Khadi and Handlooms be pleased to state:

(a) whether the employees of the Handloom Sales Centre at Kuralagam in Madras had themselves purchased the blankets, carpets and Bedsheets with rebate and discounts recently; and

(b) the steps taken to prevent this practice?

மாண்புமிகு திருமதி சுப்புலட்சுமி ஜெகதீசன்: (அ) & (ஆ) போர்வைகள், தரைவிரிப்புகள், படுக்கை விரிப்புகள் போன்ற பழைய தேக்கமுற்ற சரக்குகள் 50% வரையில் தள்ளுபடி விலையில் விற்கப்பட்டன. இச்சலுகை பொது மக்களால், அரசு ஊழியர், கோ-ஆப்டெக்ஸ் ஊழியர்கள் அனைவரால் பயன்படுத்தப்பட்டது.